2020 மார்ச் 23]

நிச்சயமாக அது மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்ற கோரிக்கையினை தங்கள் மூலமாக வைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 21D பேருந்து வேகமாகச் செல்வதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உடனடியாக அதன் நேர அளவுகளை இன்றே கணக்கிட்டு அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த வழித்தடங்களில் சிற்றுந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

165—

மாணவர்கள் விடுதி

***8603—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஒன்றியம், கழுதூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்றென்றும் வணங்கும் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி எனது முதல் வணக்கத்தினைத் தெரிவித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் சிறப்பாக ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அவருக்கு உற்ற துணையாக இருக்கும் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், தங்களுக்கும் எனது வணக்கத்தினை உரித்தாக்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஒன்றியம், கழுதூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி புதியதாக அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.

திருமதி ப. மனோன்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, எனது வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக வழங்கப்படும் கல்லூரி விடுதி ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின்படி அமைத்துத்தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து, உரிய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மற்றும் துறை இயக்குநர் அவர்களிடமிருந்து அறிக்கையினைப் பெற்று, தேவையினைக் கருத்திற்கொண்டு, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின்

மேலான அனுமதி பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(அ) மதுரை சட்டக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுதல் பற்றிய சட்டத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, முற்றிலும் பழுதடைந்துள்ள மதுரை அரசு சட்டக் கல்லூரியின் பழைய கட்டடத்திற்குப் பதிலாக, புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) குற்ற வழக்குத் தொடர்வுத் துறை மற்றும் சட்டக் கல்வி இயக்குநரகங்களுக்கு புதிய கட்டடம் உள்ளிட்ட உள் (நீதிமன்றங்கள்) துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் (நீதிமன்றங்கள்) துறை குறித்த பின்வரும் அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்:

குற்ற வழக்கு தொடர்வுத் துறை மற்றும் சட்டக் கல்வி இயக்குநரகங்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த சொந்தக் கட்டடம், 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)